கோளறு திருப்பதிகம்

தம்
எட்டாவது
பிராயத்தில்

திருஞான சம்பந்தப் பிள்ளையார்

திருமறைக் காட்டில்

திருநாவுக்கரசு நாயனர்

முன்னிலையில்

அருளிச்செய்தது.

இச்சிறு வெளியீடு

திருக்கருவை
'வெண்ணெய்மலை முருகரந்தாதி'
ஆசிரியர்

திரு அருட் பேறுபெற்ற
சிவத்திரு.
கோ. தெ. இராமசாமி முதலியார்

அவர்கள் பால்

நீங்காது நிலவும்
அன்பிற்கும், நன்றிக்கும்

அறி குறி.

பதிப்புரை.

திருஞான சம்பந்தப் பிள்ளையார் திருநாவுக்கரசு நாயனாருடன் மறைக்கதவம் திறப்பித்துத் திருமறைக் காட்டில் வதியுங்கால், சுந்தர பாண்டியனுடைய தேவியார் மங்கையர்க்கரசியாரும் முதலமைச்சர் குலச்சிறையாரும், திருநீறணிவோர் அச்சமின்றி உலவ முடியாத பாண்டிநாட்டுக்கு வரவேண்டிப் பிள்ளையாருக்கு விடுத்த அழைப்பு வந்தது. அது கண்டு பிள்ளையாரும் புறப்பட ஆயத்தமானார்.

அதுகாலை பிள்ளையாருடைய கோளும் நாளும் சரியில்லை என்பதையும் பாண்டிநாடு சமண் ஆதிக்கத்திலுள்ளது என்பதையும் (எண் பெருங்குன்றத்து எண்ணாயிரம் சமண் பிரதிநிதிகள் மாநாடு நடத்த இருக்கும் சமயம்) சமணர்கள் வஞ்சகம் செய்ய அஞ்சார்கள் என்பதையும் காட்டிப் பிள்ளையாரைத் தடுத்து

தாமே போய் ஆவன செய்துவருவதாகக் கூறினார் தமக்குச் செய்த வஞ்சகங்களை நினைவு கூர்ந்த ஆளுடைய அரசு.

அதற்குப்பரசமய கோளரியான பிள்ளையார், கோளும் நாளும் அடியார்களை நலியா என்றும் தம்மைப் பின்பற்றுவோரைப் பிடிக்கக்கூடாது என்றும் அதற்குரிய அதிகாரம் தமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்றும் பாண்டிநாட்டில் இன்னதுதான் நடக்க இருக்கிறது என்றும் கூறுவோராகக் கோளறு திருப்பதிகம் அருளிச்செய்தார். அப்பரும் ஆமோதித்துப் பாலறுவாயரே பாண்டிநாடு சென்று திருநீற்றுநெறியை நிலைநாட்டுவதென இசைந்தார். அந்நாள் தொட்டு அறிஞர் பலர் இப்பதிகத்தை ஓதி நிறைந்து. உய்வதை யறிந்து, வேண்டுவோருக்கு எளிதில் கிட்டும் படியாகப் பதிப்பித்த ஓர் இலவச வெளியீடு இது.

உ

கோளறு திருப்பதிகம்.

பண்: பியந்தைக் காந்தாரம்.

வேய் உறு தோளிபங்கன்
விடம் உண்ட கண்டன்
மிக நல்லவீணை தடவி

மா[சு]அறு திங்கள் கங்கை
முடிமேல் அணிந்[து] என்
உளமே புகுந்த அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய்
புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்[பு] இரண்டும் உடனே

ஆசறு நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. —1

என்பொடு கொம்பொ[டு] ஆமை
இவை மார்பிலங்க
எரு[து] ஏறி ஏழையுடனே

பொன்பொதி மத்த மாலை
புனல்சூடி வந்[து] என்
உளமே புகுந்த அதனால்

ஒன்பதொ[டு] ஒன்றொ[டு] ஏழு
பதினெட்டொ[டு] ஆறும்
உடன்ஆய நாள்கள் அவைதாம்

அன்பொடு நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. —2

உருவளர் பவள மேனி
ஒளி நீ[று] அணிந்[து]
உமையோடும் வெள்ளை விடைமேல்

முருகலர் கொன்றை திங்கள்
முடிமேல் அணிந்[து] என்
உளமே புகுந்த அதனால்

திருமகள் கலைய[து] ஊர்தி
செயமாது பூமி
திசைதெய்வம் ஆன பலவும்

அருநெதி நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. —3

மதிநுதல் மங்கை யோடு
வடபால் இருந்து
மறைஓதும் எங்கள் பரமன்

நதியொடு கொன்றை மாலே
முடிமேல் அணிந்[து] என்
உளமே புகுந்த அதனுல்

கொதிஉறு காலன் அங்கி
நமனேடு தூதர்
கொடு நோய்கள் ஆனபலவும்

அதிகுணம் நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. —4

நஞ்சணி கண்டன் எந்தை
மடவாள் தனேடும்
விடைஏறும் நங்கள் பரமன்

துஞ்சிருள் வன்னி கொன்றை
முடிமேல் அணிந் தென்
உளமே புகுந்த அதனல்

வெஞ்சின அவுண ரோடும்
உரும் இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்

அஞ்சிடும் நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. —5

வாள்வரி அதள்அ[து] ஆடை
வரி கோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்

நாள் மலர் வன்னிகொன்றை
நதிசூடி வந்[து] என்
உளமே புகுந்த அதனால்

கோள் அரி உழுவையோடு
கொலையானை கேழல்
கொடு நாகமோடு கரடி

ஆள்அரி நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. —6

செப்[பு] இளமுலை நன்மங்கை
ஒரு பாகம் ஆக
விடைஏறு செல்வன் அடைவார்

ஒப்[பு]இள மதியும் அப்பும்
முடிமேல் அணிந்[து] என்
உளமே புகுந்த அதனால்

வெப்பொடு குளிரும் வாதம்
மிகையான பித்தும்
வினை ஆன வந்துநலியா

அப்படி நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே, —7

வேள்படவிழி செய்[து] அன்று
விடை மேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்

வாள்மதி வன்னி கொன்றை
மலர்சூடி வந்[து] என்
உளமே புகுந்த அதனால்

ஏழ்கடல் சூழ் இலங்கை
அரையன் தனோடும்
இடர் ஆனவந்து நலியா

ஆழ்கடல் நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே, —8

பலபல வேடம் ஆகும்
பரன் நாரி பாகன்
பசுஏறும் எங்கள் பரமன்

சலமகளோ[டு] எருக்கும்
முடிமேல் அணிந்[து] என்
உளமே புகுந்த அதனுல்

மலர்மிசை யோனும் மாலும்
மறையோடு தேவர்
வரு காலம் ஆனபலவும்

அலைகடல் மேரு நல்ல
அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே, —9

கொத்தலர் குழலியோடு
விசயற்கு நல்கு
குணம்ஆய வேட விகிர்தன்

மத்தமும் மதியும் நாகம்
முடிமேல் அணிந்[து] என்
உளமே புகுந்த அதனால்

புத்தரொ[டு] அமணை வாதில்
அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே

அத்தகு நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே, —10

தேன் அமர்பொழில் கொள் ஆலை
விளை செந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும்நிகழ

நான் முகன் ஆதியாய
பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்

தான் உறு கோளும் நாளும்
அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்

ஆனசொல் மாலை ஓதும்
அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. —11

திருச்சிற்றம்பலம்.



திருவள்ளுவர் அச்சகம்,
கருவூர்
துன்முகி, ஆனி, 29 வியாழன் 12-7-1956